# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 65 /2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 4 | நாள் | 30.08.2024 |
| பெயர் | சுபா | ஜாதி | |
| கணவர் பெயர் | கதிரவன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி Recall செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவத்திற்கு முதல் நாள் நிவாஸ் என்பவர் 1 வது எதிரியை அடித்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்படி அடித்ததாக பேசிக்கொண்டார்கள். சம்பவம் நடந்தபோது நான் எந்த வீட்டில் இருந்தேன் என்றால் மாடி வீட்டிற்கு வலது பக்கம் உள்ள ஓட்டு வீட்டில் இருந்தேன். அப்போது என்னுடன் யார்யார் இருந்தார்கள் என்றால் என் மாமியார் சின்னாயாள், என் ஒப்படியாள் அனுசுயா, என் கணவர் கதிரவன், என் மாமனார் ஆகியோர் ஓட்டு வீட்டிற்கு பின்னாடி உள்ள கொல்லையில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். நாங்கள் நின்று பேசிக்கொண்டிருந்த இடம் புதிதாக கட்டிய மாடி வீட்டிலிருந்த எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் ஒரு 10, 15 அடி தூரத்தில் உள்ளது. அப்போது என்ன பேசிக்கொண்டிருந்தோம் என்றால் என்னுடைய கைக்குழந்தை (மகள்) வைத்துக்கொண்டு விளையாண்டு கொண்டு பேசிக்கொண்டிருந்தோம். என் மாமனாரும் என் கணவரும் குழந்தையுடன் சிரித்து பேசிக் கொண்டிருந்தார்கள் என்றால் ஆமாம். யார் யாரை அடித்தார்கள் என்று நான் நேராக பார்த்தேனா என்றால் ஆமாம் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். என் மாமியாரையும் என் ஒப்படியாள் அனுசுயாவையும் எப்படி தாக்கினார்கள் என்றால் கல்லையும் கழியையும் எறிந்து தாக்கினார்கள். நான்கு எதிரிகளில் யார் கல்லால் அடித்தார்கள்?

யார் கழியால் அடித்தார்கள் என்றால் ? பதட்டத்தில் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரிகள் அடித்தபிறகு எந்த திசையை நோக்கி ஓடினார்கள் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. என் மாமியாருக்கும் அனுசுயாவுக்கும் வெளிக்காயங்கள் எதுவும் இல்லாததால் அவர்கள் மருத்துவமனைக்கு போக வில்லை என்றால் சரி. போலிசார் என்னை விசாரித்தார்கள் அப்போதும் இப்படி தான் சொன்னேனா என்றால் ஆமாம். எதிரிகள் தான் வழக்கு சம்பவத்திற்கு காரணம் என்று சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளால் யாருக்கும் எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றாலும் சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல. என் மாமனாருக்கு சிறுநீரக பிரச்சனை இருந்தது என்றாலும் ஜெயங்கொண்டத்தில் சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்றால் அதெல்லாம் எதுவுமே இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.